2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

ஆ. ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு அறிவிப்பு. இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த திருவாளர்கள் உமநாத், ரகுமான்கான் ஆகியவர்கள் இருக்கையில் இல்லாததால், அது இன்றைக்கு இல்லை. அடுத்து கவன ஈர்ப்புகள்.

4 கவன ஈர்ப்புகள்.

அ. வேலூர் நகராட்சியில் கழிவுநீர் குடிநீருடன் கலத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பர் ஆகியோர் ஒரே பொருள் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் அதை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

*திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ''வேலூர் நகராட்சியின் வடக்குப் பகுதியில் குடி தண்ணீரோடு கழிவு நீர் கலந்து விடுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

வட ஆற்காடு மாவட்டம், வேலூர் நகராட்சியில் வட பகுதியில் உள்ள மக்களுக்கு வினியோகிக்கப்படும் குடிநீர் சத்துவாச்சாரி-தமிழ்நாடு குடிநீர் வடிகால் திட்டத்தின் கீழ்த் தரப்படுகிறது. பாலாற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரில் பெரும்பகுதி, வேலூர் நகராட்சியின் உயர்நிலை நீர்த்தேக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து நகருக்கு பகிர்மானக் குழாய்கள் மூலமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2. தலைமைப் பணியிடத்தில் நீர் சுத்திகரிக்கப்படுகிறது (Chloririsation) நகரின் பல பகுதிகளுக்கும் செலுத்தப்படும் தண்ணீரில் தேவையான குளோரின் (2பி.பி.எம்.) அளவு நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. இடையில் கழிவுநீர் கலக்க ஏதுவில்லை. இன்றுவரை பொதுமக்களிடமிருந்து இது தொடர்பான எவ்வித முறையீடும் இல்லை.

1981 ஏப்ரல் 16]

3. தவிர, மூன்று மாதத்திற்கொருமுறை நீர் பகுப்பாய்வாளர் Water Analyst), கிண்டி அவர்களால் நீர் மாதிரி பரிசோதனை (Water Sample Examination) பகுப்பாய்வு செய்து தண்ணீர் ''பாதுகாக்கப்பட்ட குடிநீராக திருப்திகரமாக உள்ளது'' என சான்று தந்துள்ளார். இம்மாதிரி பகுப்பாய்வு கடைசியாக 22-12-80 அன்று செய்யப்பட்டது. அதினும் குடிநீரில் கெடுதல் ஏதுமில்லை என அறியப்படுகிறது.

4. மேலும், மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வட ஆற்காடு வட்டம், அவர்கள் 9-4-81 அன்று வேலூர் குடிநீர் தலைமைப் பணியிடம் முதலியவைகளை ஆய்வு செய்து கழிவு நீர் ஏதும் குடிநீருடன் சலக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்தை இரண்டு பகுதிகளாக பிரித்து தண்ணீர் விடுகிறார்கள். 40 ஆண்டுகள் காலமாக எந்தவித குறையும் இல்லாமல் ஒரு வித சுவையோடு இருந்த குடிதண்ணீர், இப்போது வடக்குப் பகுதியில், கடந்த 5 மாத காலமாக கிணற்று நீரை விட மோசமான சுவையில் அதனுடைய பழைய சுவை மாறி கெட்டுப்போயிருக்கிறது. அதனுடைய உண்மை நிலையை அமைச்சர் அறிவாரா? அதைப்போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகாவனந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் கெட்டுப் போய்விடவில்லை என்றும் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வட ஆற்காடு வட்டம் அவர்கள் 9-4-1981 அன்று வேலூர் குடிதண்ணீர் தலைமை பணியிடங்களை முறையாக ஆய்வு செய்து கழிவு நீர் எதுவும் குடிதண்ணீருடன் கலக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.

[முற்பகல் 10.10]

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் தண்ணீர் வடபகுதி, தென்பகுதி என இரு பகுதிகளாக பிரித்து வழங்கப்படுகிறது, ஏற்கனவே எங்கேயிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டதோ அங்கேயிருந்து இப்போதும் தண்ணீர் எடுக்கப் பட்டு தெற்குப் பகுதிக்கு வழங்கப்படுகிறது. ஆனால் சத்துவாச் சேரிக்கு அருகிலே உள்ள கிணற்றிலேயிருந்து எடுக்கிற தண்ணீரை வடக்கு பகுதிக்குத் தருகிறார்கள். உண்மை என்னவென்று சொன்னால் வேலூர் நகர முழுவதுமிருந்து வருகிற கழிவுநீர் பாலாற்றிலே கலக்கிறது. அதற்குக் கீழே இந்த தண்ணீர் எடுக்கப் படுகிற அந்த ஊற்றுகள் இருப்பதன் விளைவாக இந்தத் தண்ணீர் முழுமையும் கெட்டுவிட்டது, என்பதுதான். அதை அரசு ஆராய்ந்து மேலும் விசாரித்து அந்த நீர் இந்த நீரோடு கலக்காமல் இருக்க ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இடையிலே கழிவு நீர் கணக்கு ஏது இல்லை. இன்றுவரை பொது மக்களிடம் இருந்து இது சம்பந்தமாக எந்தவிதமான முறையீடும் வரவில்லை என்ற தகவல் எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

ஆ. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் சங்கங்களில் இருந்து

துணிகள் கொள்முதல் செய்யாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக் கனி எம். சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் பற்றிகவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் அதை மாண்புமிகு கைத்தறி கதர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம், நெசவாளர் சங்கங்களில் இருந்து துணிகள் கொள்முதல் செய்யாததால் துணிகள் தேங்கி நெசவாளர் சங்கங்கள் இயங்காமலிருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி கதர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழகத்திலுள்ள 1,151 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாக விளங்குகிறது. அச் சங்கங்களுக்குத் தேவையான மூலப்பொருட் களான நூல் மற்றும் இரசாயனப் பொருட்களை நியாயமான விலையில் அவற்றுக்குக் கிடைக்கச் செய்வதுடன் அச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணி ரகங்களில் 50% வரை கொள்முதல் செய்து அதன் 444 கிளை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் கைத்தறி துணி களுக்கு கோ-ஆப் டக்ஸ் நிதி நிலையைப் பொருத்து பெரும் பாலும் அவ்வப்போது பணம் பட்டுவடா செய்யப்படுகிறது. விற்பனை கூடங்களுக்கான மாதாந்திர தேவைப் பட்டியலை சேகரித்து கொள்முதல் செய்யும் பிராந்தியங்களுக்கு கோ-ஆப் டெக்ஸ் அனுப்புகிறது. உற்பத்தி செய்யும் சங்கங்களில் திறனைப் பொறுத்து தேவைப்பட்டியல்களின் படி பிராந்திய நிர்வாகியால் பரவலாக எல்லா சங்கங்களிடமிருந்தும் கைத்தறி துணிகள் கொள்முதல் செய்யப்படுகிறது. சரக்குகள் அனுப்பப்பட்டதற்கான பட்டியல்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து